(5) Redecking the pier to Dhanushkodi. Estimate Rs. 17,00,000.

இந்த வேலைகள் நடைபெற்றிருக்கின்றன, பாம்பன் பாலத்தைப் பொறுத்தவரையில் 532.87 லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டிருக்கிறது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். விரைவாக அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகாரிகள் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அனுமதி கிடைத்ததும் வேலைகள் தொடங்கப்படும்.

மாயூரம்-தஞ்சாவூர் நெடுஞ்சாலை

*115 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-தஞ்சாவூர் அரசினர் நெடுஞ்சாலையை அகலப் படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சாலையின் ஒரு பகுதியை விரிவுபடுத்தும் வேலைக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

வெள்ள பராமரிப்புக்கோட்டப் பணியாளர்கள்

* 116 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெள்ளப் பராமரிப்புக் கோட்டத்தில் பணிபுரிந்த 10 (a) (1) படி விலக்களிக்கப்பட்டவர்களுக்கு வேறு இடங்களில் வேலை அளிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

Rain waters flowing into sea from Kanyakumari district.

* 117 Q.—Thiru T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have set up any special team to find out the quantum of water emptied into the sea from the various rivers and channels in Kanyakumari district during the two seasonal rainy periods every year?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. டி. கணபதி : குமரி மாவட்டத்தில் மழைக்காலங்களில் அங்குள்ள அணைகள் எல்லாம் பெருகி ஜூன், ஜூலை, அக்டோபர், நவம்பர் மாதங்களில் கடலில் வீணாகத் தண்ணீர் போவதை அண்டையிலுள்ள வறட்சிப் பகுதியான நாங்குனேரி வட்டத் திற்குத் திருப்புவதற்கு ஒரு குழு அமைத்து வேண்டியதைச் செய்ய அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.